# கொடைக்கானல் நகராட்சி
# திண்டுக்கல் மாவட்டம்

## 2020–2021 முதல் 2022–2023 ஆம் ஆண்டு குத்தகை உரிமை
## பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான கீழ்கண்டுள்ள மாதவாடகை (மூன்றாண்டு குத்தகை) இனஙகளை (வரிசை எண். 1 முதல் 5 வரை) 2020–21 முதல் 2022–23 முடியவுள்ள மூன்றாண்டு காலத்திற்கு அனுபவித்துக்கொள்ளும் குத்தகை உரிமைக்கு 17.09.2020 வியாழக்கிழமை 11.30 மணிக்கு அல்லது அதற்கு பின்னர் ஒத்தி வைக்கப்படும் நாட்களிலும் நகராட்சி அலுவலகத்தில் நகராட்சி ஆணையாளர் அவர்களாலோ அல்லது அவரது அதிகாரம் பெற்ற அலுவலராலோ பகிரங்கமாக பொது ஏலத்தில் விடப்படும்.

மேலும் கீழ்கண்டுள்ள ஆண்டு குத்தகை (மூன்றாண்டு குத்தகை) இனங்களை (வரிசை எண். 1 முதல் 6 வரை) 2020–21 முதல் 2022–23 முடியவுள்ள மூன்றாண்டு காலத்திற்கு அனுபவித்துக்கொள்ளும் குத்தகை உரிமை இனங்களுக்கு (தனித்தனியாக) மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் வியாழக் கிழமை அன்று பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தப்புள்ளி கொடுப்போர் முன்வைப்பு தொகைக்கான ஒப்புதல் சீட்டு நகலை ஒப்பந்தபுள்ளியுடன் இணைத்தும், ஒப்பந்தப்புள்ளி உறையின் மீது குத்தகை இனத்தின் விபரத்தினை குறிப்பிட்டும் கொடுக்க வேண்டும். காலம் கடந்து வரும் ஒப்பந்தப்புள்ளிகள் நிராகரிக்கப்படும். அன்றே வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை ஏலம் நடத்தி முடிந்தவுடன் வருகை புரிந்தவர்கள் முன்னிலையில் நகராட்சி ஆணையராலோ அல்லது அவரது அதிகாரம் பெற்றவராலோ திறந்து வாசிக்கப்படும்.

பொது ஏலத்தில் கலந்து கொள்வோர் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் கொடுப்போர் கீழ்குறிப்பிட்ட விபரப்படி ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிக்கு தனித்தனியே முன்வைப்பு தொகை செலுத்த வேண்டும். ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிக்கான முன்வைப்பு தொகைக்கு வங்கியில் "Commissioner, Kodaikanal Municipality" என்ற பெயரில் டிமாண்ட்டிராப்ட் எடுத்து நகராட்சியில் பெறப்பட்ட வரி பாக்கியின்மை சான்று, இருப்பிட சான்று, PAN கார்டு, குடும்ப அடையாள அட்டை நகல் மற்றும் புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டை நகல் ஆகியவற்றுடன் 16.09.2020 புதன் கிழமை மாலை 4 மணிக்குள் கொடுத்து அலுவலக நேரத்தில் ஒப்புதல் சீட்டை பெற்றுக்கொள்ள வேண்டும் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி தேதியில் முன்வைப்பு தொகைக்கான டிமாண்ட்டிராப்ட் பெற்றுக் கொள்ளப்படமாட்டாது. முன்வைப்பு தொகைக்கு எக்காரணத்தைக் கொண்டும் காசோலைகள் மற்றும் பணமாக செலுத்துவதை ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிக்கு டிமாண்ட் டிராப்ட் கொடுத்து ஒப்புதல் சீட்டு பெற்றவர்கள் தவிர்க்க முடியாத காரணங்களால் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ள இயலாத சூழ்நிலை ஏற்படும் பட்சத்தில் அவரது சார்பாக வருபவர்கள் அவரது அத்தாட்சி மற்றும் "Notary Public" மூலம் பெறப்பட்ட சான்றுடன் வந்தால் தான் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவார்கள். ஆவ்வாறு அதிகாரம் பெற்று வருபவர்களும் வரி பாக்கியின்மை சான்று, இருப்பிட சான்று, குடும்ப அடையாள அட்டை நகல் மற்றும் புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டை நகல்போன்ற ஆவணங்களுடன் வரவேண்டும். இதர விபரங்கள் வேண்டுவோர் அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் நேரிலோ அல்லது தபால மூலமாகவோ கேட்டு தெரிந்து கொள்ளலாம்.

குத்தகை இனங்கள் மூன்றாண்டு காலத்திற்கு உரியதாகவே இருந்தாலும் ஏலக் கேள்வி மற்றும் ஓராண்டுக்கு உரியனவாகும். ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளிகளில் உயர்ந்த பட்ச கேள்விகள் முடிவான பின்னர் ஏலதாரர் எவரும் மேலும் உயர்ந்த பட்ச தொகைக்கு அவ்வினத்தை ஏலம் எடுக்க விரும்பினால் ஏலத் தொகையுடன் கூடுதலாக 25% தொகையினை சேர்த்து நகராட்சி கருவூலத்தில் செலுத்தி ஆணையரிடம் விண்ணப்பித்தால் இவ்வினம் மறு ஏலத்திற்கு கொண்டு வரப்படும். இந்த இனங்களின் ஆரம்ப கேள்வியானது முந்தைய உயர்ந்த பட்ச ஏலக் கேள்வியிலிருந்து 25% குறைவு இல்லாது இருக்கும்.

Scanned by TapScanner

## 2020–2021–ம் ஆண்டிற்கு ஏலம் விடக்கூடிய மாத வாடகை குத்தகை இனங்கள்

1. **அரசாணை (நிலை) 92, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.3.7.2007–ன் கீழ் ஏலம் மற்றும் ஒப்புந்தப்புள்ளி கோரப்படும் இனங்கள்.**

**(மாத வாடகை குத்தகை இனங்கள் ஒப்படைக்கும் நாள் முதல் மூன்றாண்டுகளுக்கு உபயோகித்துக் கொள்ளும் உரிமம்)**

| வ. எண். | குத்தகை இனம் | ஏலம் / ஒப்பந்தப் புள்ளிக்கான முன்வைப்புத் தொகை ரூ. | ஏலக் கேள்விக்கான காப்புத் தொகை ரூ. | உரிம காலம் |
|---|---|---|---|---|
| 1. | **31வது அழைப்பு**<br>நவீன புதிய பேருந்து நிலைய கடைகள் எண்கள்.1,2,3,4,5,7,14,16,17,18,25,27,30,31,32 மற்றும் 36க்கு பயன்பாட்டு உரிமம். | 2,00,000/– | 2,00,000/– | மூன்றாண்டு |
| 2. | **முதல் அழைப்பு**<br>அண்ணா சாலையில் உள்ள நகராட்சிக்குச் சொந்தமான பலசரக்கு கடை எண்.(9,10) கடை அனுபவிக்கும் உரிமம். | 10,00,000/– | 10,00,000/– | |
| 3. | **முதல் அழைப்பு**<br>நகராட்சிக்குச் சொந்தமான பழைய பேருந்து நிலைய வளாகத்திற்குள் கட்டப்பட்டுள்ள வணிக வளாகத்தின் மேல் தளத்தில் வணிக பயன்பாட்டுக்கு அமைக்கப்பட்ட 1137 சதுரடி பரப்பளவுள்ள கட்டிடம் அனுபவிக்கும் உரிமம் கடை எண்.7. | 10,00,000/– | 10,00,000/– | |
| 4. | **முதல் அழைப்பு**<br>நகராட்சிக்குச் சொந்தமான பழைய பேருந்து நிலைய வளாகத்திற்குள் கட்டப்பட்டுள்ள வணிக வளாகத்தின் தரைத் தளத்தில் கட்டப்படடுள்ள 47 சதுரடி பரப்பளவுள்ள கடை அனுபவிக்கும் உரிமம் கடை எண்.8. | 2,00,000/– | 2,00,000/– | |
| 5. | **முதல் அழைப்பு**<br>அப்பர்லேக் பகுதியில் உள்ள தொலைநோக்கி இல்லம் கடையாக மாற்றப்பட்டுள்ளதை அனுபவிக்கும் உரிமம். | 2,00,000/– | 2,00,000/– | |

2. **அரசாணை (நிலை) எண்.181, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.19.9.2008–ன் கீழ் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்படும் இனங்கள்.**

**(ஆண்டுக் குத்தகை இனங்கள் 2020–2021 முதல் 2022–2023 முடிய (உரிமம் முன்றாண்டுக்குரியது)**

| வ. எ | குத்தகை இனம் | ஏலம் / ஒப்பந்தப் புள்ளிக்கான முன்வைப்புத் தொகை ரூ. | ஏலக் கேள்விக்கான காப்புத் தொகை ரூ. | உரிம காலம் |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 6 |
| 1. | **14வது அழைப்பு**<br>புரூட்டன் காம்பவுண்டு வாகன நிறுத்தக் கட்டணம் வசூல் செய்யும் உரிமம். | 8,00,000/– | 8,00,000/– | மூன்றாண்டு |
| 2. | **14வது அழைப்பு**<br>நகராட்சிக்குச சொந்தமான புரூட்டன் வளாகத்தில் உள்ள ஸ்கேட்டிங் ஹால் மற்றும் டேசிங் கார் அமைந்திருந்த இடம் | 4,00,000/– | 4,00,000/– | |
| 3. | **14வது அழைப்பு**<br>நகராட்சிக்குச் சொந்தமான மூஞ்சிக்கல் விளையாட்டு மைதானத்தில் அமைக்கப் பட்டுள்ள உடற்பயிற்சிக் கூடம். | 50,000/– | 50,000/– | மூன்றாண்டு |
| 4. | **முதல் அழைப்பு**<br>புரூட்டன் காம்பவுண்டு வளாக கட்டண கழிப்பறை வசூல் செய்யும் உரிமம். | 2,00,000/– | 2,00,000/– | |



Scanned by TapScanner

| | | | | |
|---|---|---|---|---|
| 5. | <u>முதல் அழைப்பு</u><br>புதிய பேருந்து நிலைய கட்டண கழிப்பறை வசூல் செய்யும் உரிமம். | 2,00,000/– | 2,00,000/– | |
| 6. | <u>2வது அழைப்பு</u><br>பிரையண்ட் பார்க் பகுதியில் அமைந்துள்ள வாகன நிறுத்துமிடத்தில் வாகன நிறுத்தக் கட்டணம் வசூல் செய்யும் உரிமம். | 5,00,000/– | 5,00,000/– | |

மேற்கண்ட பொது ஏலம் / பொது ஒப்பந்தப்புள்ளி விபரம் குறித்து இதர விபரங்கள் மற்றும் நிபந்தனைகள் பற்றிய விபரம் அலுவலக நேரத்தில் அ4 இருக்கையில் நேரிலோ அல்லது <u>www.tnurbantree.tn.gov.in/kodaikanal</u> என்ற இணையதள முகவரியிலோ தெரிந்து கொள்ளலாம்.

ஆணையாளர்,
கொடைக்கானல் நகராட்சி.

1.9.2020

1.9.2020

Scanned by TapScanner